


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ ஜூன். 05, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 241 ❖ ரூ.10

ஒடிசா ரயில் விபத்தில் தேடப்பட்டு வந்த 8 பேரில் மூவர் பத்திரமாக உள்ளனர்

# தகவல்

## 127 நபர்களில், 119 நபர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரியவந்துள்ளது. கட்டணமில்லா தொலைபேசி-1070 மற்றும் செல்பேசி-9445869843 என்ற எண்களிலும் தெரிவிக்கலாம்: தமிழக அரசு

சென்னை , ஜூன்.5-

ஒடிசா ரயில் விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் தேடப்பட்டு வந்த நிலையில், 3 பேர் பத்திரமாக உள்ளது தெரியவந்துள்ளது. எஞ்சிய 5 பேரை தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் மாநில அவசர கால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.



ஒடிசா மாநிலம் பாலசோரில் ஏற்பட்ட பெரும் ரயில் விபத்தில் காயமடைந்த தமிழகத்தைச் சேர்ந்த பயணிகளுக்கு தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளை செய்திடவும், உயிரிழந்தவர்களை கண்டறிந்து அவர்களது குடும்பத்தினருக்கு உதவிடவும், தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் மீட்புக் குழு அமைக்கப்பட்டது. மேலும், மீட்புப் பணிகள் குறித்த விபரங்களை பெறுவதற்காகவும், பயணிகளின் உறவினர்கள் பயணிகளைப் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக 24 மணி நேர கட்டுபபாட்டு அறை அமைக்கப்பட்டு முழு வீச்சில் சென்னை எழிலகத்தில் மாநில அவசரகாலசெயல்பாட்டு மையத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், முதல்வரின் உத்தரவின் பேரில் ஹவுராவிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு ரயிலில் பயணம் செய்ய முன்பதிவு செய்த பயணிகளது பட்டியல் தென்னக ரயில்வேயிலிருந்து பெறப்பட்டு அதில் தமிழ்ப் பெயர் கொண்டவர்களையும், தமிழ்நாட்டில் இருப்பிட முகவரி அளித்துள்ள 127 நபர்களது பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள 127 நபர்களை மாநில அவசரகாலசெயல்பாட்டு மையத்திலிருந்துதொடர்பு கொள்ளப்பட்டதில், 119 நபர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரியவந்துள்ளது.எஞ்சிய 8 நபர்களது செல்பேசி மற்றும் முகவரி இல்லாத நிலையில் அவர்களை தொடர்புகொள்ள இயலாதநிலைஏற்பட்டது.

ஒடிசாவில் முகாமிட்டுள்ள மீட்புக் குழுவும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டு அறையும் இணைந்து தொடர்பு கொள்ள இயலாத நபர்களுடைய விபரங்களை சேகரிக்கும் பணியினைமேற்கொண்டு வருகிறது.

மேலும், இந்த ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நபர்களது விவரங்கள் ஒடிசாவில் இதுவரை சேகரிக்கப்பட்டதில் தமிழகத்தைச் சேர்ந்த எவரும் இந்த ரயில் விபத்தில் உயிரிழக்கவில்லைஎன்பது தெரியவருகிறது. மேலும், விபத்தில் காயமுற்று சிகிச்சை பெற்றுவரும் நபர்களது விபரங்களை இதுவரை பரிசீலனை செய்ததில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் காயமுற்று சிகிச்சை பெறவில்லை என்ற விவரமும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இதுவரைசேகரிக்கப்பட்ட விபரத்தின் அடிப்படையில் தொடர்புகொள்ள இயலாத நிலையில் உள்ள (1) நாரகணிகோபி, ஆண், வயது – 34 , (2) கார்த்திக், ஆண், வயது –19, (3) ரகுநாத், ஆண். வயது – 21, (4) மீனா, பெண், வயது – 66, (5) எ. ஜெகதீசன், ஆண், வயது – 47, (6) கமல், ஆண், வயது – 26, (7) கல்பனா, பெண், வயது – 19, (8) அருண், ஆண், வயது –21, இந்த 8 நபர்களது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர், இவர்கள் குறித்த தகவல் அறிந்திருப்பின் மாநில அவசரகாலசெயல்பாட்டு மையத்திற்கு எண்களில் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று தமிழக அரசு செய்தி வெளியிட்டிருந்தது.

5 பேரை தொடர்புகொள்ள முடியவில்லை: ஒடிசா ரயில் விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் தேடப்பட்டு வந்த நிலையில், 3 பேர் பத்திரமாக உள்ளது தெரியவந்துள்ளது. இந்த 8 பேரில், கோவையைச் சேர்ந்த கோபி, சென்னையைச் சேர்ந்த ஜெகதீசன் ஆகிய இருவரும் பத்திரமாக ஊர் திரும்பியுள்ளது தெரியவந்துள்ளது. மேலும், கமல் என்பவர் விபத்துக்குள்ளான ரயிலில் பயணம் செய்யவில்லை என்பது தெரியவந்துள்ளது. இந்த தகவல் சக பயணிகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் 3 பேர் தவிர்த்து, கார்த்திக், ரகுநாத், மீனா, கல்பனா மற்றும் அருண் ஆகிய 5 பேரை தொடர்புகொள்ள முடியவில்லை என்று எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவர்கள் குறித்த தகவல்களை, மாநில அவசரகாலசெயல்பாட்டு மைய உதவி எண்களான, கட்டணமில்லா தொலைபேசி 1070 மற்றும் செல்பேசி 9445869843 என்ற எண்களிலும் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக்கை சந்தித்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் பாதுகாப்பு, மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ உதவிகள் குறித்து கலந்துரையாடினார். உடன் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், மற்றும் ஒடிசா மாநில அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த யாரும் உயிரிழக்கவில்லை

## ஒடிசாவில் இருந்து திரும்பிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி

சென்னை, ஜூன்.5-

ஒடிசாவில் நிகழ்ந்த ரெயில் விபத்தில் 275 பேர் உயிரிழந்துள்ளதாக அரசு தரப்பில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், காயமடைந்த 1175 பயணிகளில் 793 பேர் சிகிச்சைக்கு பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த பலர் விபத்தில் சிக்கிய ரெயிலில் பயணம் செய்ததால், அவர்களுக்கு உதவும்பொருட்டு தமிழகத்தில் இருந்து அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சிவசங்கர் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஒடிசா சென்றனர். அந்த குழுவினர் நேற்று சென்னை திரும்பினர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ரெயில் விபத்தில் தமிழகத்தை சேர்ந்த யாரும் உயிரிழக்கவில்லை என்றார். 8 பேர் குறித்த தகவல் இல்லாமல் இருந்த நிலையில், 3 பேர் குறித்த தகவல் கிடைத்துள்ளது. மற்ற 5 பேரும் நலமுடன் உள்ளதாக, அவர்களுடன் உடன் பயணித்தநபர்கள்தகவல் கொடுத்துள்ளனர் எனவும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். விபத்து நடந்த இடத்தில் தண்டவாளங்களின் குறுக்கே கிடந்த ரெயில் பெட்டிகள் அகற்றப்பட்டன. சேதமடைந்த தண்டவாளங்களும் சரி செய்யப்பட்டன.இனிமின் வழித்தட இணைப்புகள் கொடுக்கப்பட்டு, அந்த வழித்தடத்தில் நிறுத்தப்பட்ட ரெயில் சேவையை மீண்டும் வழங்குவதற்காக பணிகளை அதிகாரிகள் தொடங்கி உள்ளனர். இதற்கிடையே ரெயில் விபத்து தொடர்பாக தென்கிழக்கு வட்டத்தின் ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் விசாரணை நடத்த உள்ளார்.

## புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா ஜூலை 14 தொடங்குகிறது

புதுக்கோட்டை , ஜூன்.5-

புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா ஜூலை 14 தொடங்குகிறது ஜூலை 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா ஆலோசனைக் கூட்டம் கம்பன் கழகத் தலைவர் எஸ்.ராமச்சந்திரன் தலைமையில் கம்பன் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூடுதல் செயலாளர் புதுகை சா.பாரதி அனைவரையும் வரவேற்றர். கம்பன் கழகச் செயலாளர் ரா.சம்பத்குமார் விழா பற்றி விளக்கிக் கூறினார். ஜூலை 14 வெள்ளிக்கிழமை தொடங்கி ஜூலை 23 ஞாயிற்றுக்கிழமை வரை பத்து நாட்கள் பெருவிழா கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது.

வழக்கம் போல் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் இவ்விழாவை நடத்துவது எனவும் சிறந்த தமிழ் அறிஞர்களைப் 10 நாட்களும் அழைத்து நிகழ்ச்சிகளை வடிவமைக்கவும் தினமும் மாலை 5.30 தொடங்கி 9:30 வரை நிகழ்வுகள் நடைபெறும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் துணைத் தலைவர்கள் எம்ஆர்எம் முருகப்பன், பேக்கரி மஹாராஜ் அருண் சின்னப்பா,பொருளாளர் சி. கோவிந்தராஜன், துணை பொருளாளர் கறு. ராமசாமி, இணைச்செயலாளர்கள் காடுவெட்டி குமார், பேராசிரியர் வெ. முருகையன், தொழிலதிபர் ரா. கருணாகரன் ஆகியோரும் விழா குழு உறுப்பினர்கள் அனுராதா சீனிவாசன், பேராசிரியர் மாரியப்பன், நிலவைப் பழனியப்பன், பேராசிரியர் ரவிச்சந்திரன், ஆசிரியர் காசி ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இனிவரும் தேர்தல்களில் பாஜகவை இந்திய மக்கள் வீழ்த்துவார்கள் நியூயார்கில் ராகுல் காந்தி

நியூயார்க் , ஜூன்.5-

இனிவரும் தேர்தல்களில் பாஜகவை இந்திய மக்கள் வீழ்த்துவார்கள் என்று காங்கிரஸ் முன்னாள் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



வாஷிங்டன், சான் பிரான்சிஸ்கோ நகரங்களுக்கான பயணங்களை முடித்துவிட்டு நியூயார்க் வந்தார் ராகுல் காந்தி. அவர்மான்ஹாட்டானில் உள்ள ஜாவிட்ஸ் மையத்தில்ஒருபேரணியில் உரையாற்றுகிறார். அதற்கு முன்னதாக அவர் இந்தியன் ஓவர்சீஸ் காங்கிரஸ் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அந்த விருந்து நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், "பாஜகவை எப்படி வீழ்த்த முடியும் என்பதை நாங்கள் கர்நாடகாவில் செய்து காட்டியுள்ளோம். அங்கு பாஜகவை படுதோல்வி அடையச் செய்தோம். அதை தோல்வி என்பதைவிட அழிவு என்று சொல்ல வேண்டும். பாஜகவை நாங்கள் அழித்தோம்.

கர்நாடக தேர்தலில் வெற்றிபெறபாஜகஎல்லா முயற்சிகளையும்செய்தது. அவர்களிடம்அரசாங்கம் இருந்தது.பணம்இருந்தது. எல்லா அதிகாரமும் இருந்தது. ஊடகமும் இருந்தது. ஆனாலும் நாங்கள் அவர்களைத் தோற்கடித்தோம்.அடுத்ததாக தெலங்கானாவில் அவர்களை தோற்கடிப்போம். அதன் பின்னர் தெலங்கானாவில் பாஜகவை காண்பது அரிதாகிவிடும்.

தெலங்கானாவில் மட்டுமல்லாமல் சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்திலும் கர்நாடகாவில் பாஜகவுக்கு நடந்ததை திருப்பி நடத்துவோம்.

இதற்கெல்லாம் ஒரு காரணம் இருக்கிறது. அது இந்தியாவின் புரிதலின் விளைவு. இந்தியா இப்போது ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டுள்ளது. பாஜக சமூகத்தில் பரப்பும் வெறுப்போடு முன்னே செல்லக்கூடாது எனப் புரிந்து கொண்டுள்ளது. அதனால் அடுத்து வரும் மாநிலத்தேர்தல்களிலும், 2024 மக்களவைத் தேர்தலிலும் பாஜகவின் அழிவு நடக்கப்போகிறது.

அதற்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துவிட்டன. நாங்கள் ஒரு சித்தாந்தப் போரை எதிர்கொள்ள உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஒருபுறம் பாஜகவின் பிரிவினைவாத சித்தாந்தம். மறுபுறம் அன்பும் பிரியமும் கொண்ட காங்கிரஸின் சித்தாந்தம்.

கர்நாடகாவில் பாஜக தேர்தல் வேளையில் இருவேறு சமூகங்கள் இடையே வெறுப்பைத் தூண்ட முயற்சித்தது. பிரதமரே அதற்கு முயற்சித்தார். ஆனால் அது பலனளிக்கவில்லை. கர்நாடகா மக்கள் இந்தத் தேர்தல் விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேர்தல் என்று நிரூபித்தனர்" என்றார்.

## உக்ரைன் போரில் 500 குழந்தைகளை ரஷ்யா கொன்றது: ஜெலன்ஸ்கி

கீவ் , ஜூன்.5-

உக்ரைன் மீதான போரில் ரஷ்யா குறைந்தது 500 குழந்தைகளைக் கொன்றுள்ளது என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஞாயிற்றுக்கிழமை பேசுகையில், "உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 16 மாதங்கள் ஆகின்றன. குறைந்தது 500 உக்ரேனிய குழந்தைகளை ரஷ்யா கொன்றது. ரஷ்ய ஆயுதங்கள் மற்றும் வெறுப்பு, ஒவ்வொரு நாளும் உக்ரேனிய குழந்தைகளின் உயிரைப் பறித்து அழித்துக் கொண்டே இருக்கிறது.

பிப்ரவரி 24, 2022 அன்று ரஷ்யா உக்ரைனின் மீது படை எடுத்தது முதல் ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொன்றிருக்கிறது. அவர்களில் பலர் பிரபலமான அறிஞர்கள், கலைஞர்கள்,விளையாட்டு சாம்பியன்கள். இந்தப் போரை நாம் எதிர்த்து நின்று வெல்ல வேண்டும்.

உக்ரைனின் முழு பகுதியும், எங்கள் மக்கள் , எங்கள் குழந்தைகள் அனைவரும் ரஷ்ய பயங்கரவாதத்திலிருந்து விடுபட வேண்டும்" என்றார்.


முன்னதாகஉக்ரைனில் ரஷ்ய ஆக்கிரமிப்புக்குப் பிறகு முதல் முறையாக ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் கடந்த வாரம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதே நேரத்தில் உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் ரஷ்யா தொடர்ந்து மூன்றாவது நாளாக தாக்குதலை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின் போது உக்ரைனுக்குதேவையான ஆயுதங்களைவழங்கவோம் என்று தலைவர்களும் உறுதியளித்தனர். இந்தச் சந்திப்புகளைத் தொடர்ந்து உக்ரைனில் தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









# கேரளாவில் நோய் கொடுமையால் டாக்டர் தம்பதி தற்கொலை

திருவனந்தபுரம், ஜுன்.5–

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம் மலரம்பா வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் வசித்து வந்தவர், டாக்டர் ராம்மனோகர் (வயது 70). இவரது மனைவி ஷோபா (68), குழந்தைகள் நல மருத்துவர். இவர்கள் திருச்சூரில் உள்ள திரிபிரயாரில் கிளினீக் நடத்தி வந்தனர். இதனால் அங்கேயே வசித்து வந்தனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோழிக்கோடு வந்தனர். இவர்களது மகள் திருமணமாகி தனியாக வசித்து வருகின்றனர். அவர் தான் பெற்றோரை பராமரித்து வந்துள்ளார். நேற்று ராம்மனோகர் அறை கதவு நீண்ட நேரமாக திறக்கப்படவில்லை.



இதனை தொடர்ந்து அவரது மகள் அறைக்கு சென்று பார்த்தபோது, தாயும், தந்தையும் மயங்கி கிடந்துள்ளனர். அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது 2 பேரும் இறந்துவிட்டது தெரிய வந்தது. அவர்கள் அதிக அளவு மாத்திரை தின்று தற்கொலை செய்திருப்பது போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. தற்கொலை செய்வதற்கு முன்பு ராம்மனோகர்–ஷோபா எழுதிய கடிதத்தை போலீசார் கைப்பற்றி உள்ளனர். அதில் தங்களுக்கு நோய் இருப்பதாகவும், மகள்-மருமகனுக்கு பாரமாக இருக்க விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர், இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரியலூர் அருகே வாலாஜா நகரம் கிராமத்தில் கோயில் கும்பாபிஷேக விழா வருகிற 25–ம் தேதி நடைபெறுகிறது

அரியலூர், ஜுன்.5–

வாலாஜா நகரம் கிராமத்தில், மகாசக்தி மாரியம்மன் உள்பட பல்வேறு கோயில்களுக்கும், வருகிற 25 ஆம் தேதி கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது.

அரியலூர் அருகே, வாலாஜா நகரம் கிராமத்தில் உள்ள, ஸ்ரீ விநாயகர், வள்ளி தெய்வானை உடனாய முருகப் பெருமான், விசாலாட்சி அம்மன் உடனாய விஸ்வநாதர், ஸ்ரீ கங்கை முத்து மாரியம்மன் என்கிற மகாசக்தி மாரியம்மன், ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயங்களுக்கான, நன்னீராட்டு பெருவிழா என்கிற பெருஞ்சாந்தி பெருவிழா, பன்னிரு திருமுறை, நெறிமுறை வழிப்படி நடைபெறுகிறது.

வருகிற 25. 06. 2023, ஆனி மாதம் 10–ம் நாள், காலை 9 மணி முதல் 10:30 மணிக்குள், புதுக்கோட்டை சுரேந்திரநாத் சுவாமிகள் தலைமையில் கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது. அதையொட்டி 23ஆம் தேதி திருமுறை பாராயணம் உள்ளிட்ட வேள்வி பூஜை நிகழ்ச்சிகளுடன் தொடங்கி, புனித தீர்த்த வழிபாடு, மூத்த பிள்ளையார் முதல் நிலை வேள்வி வழிபாடு, சூரிய சந்திரன் வழிபாடு, ஆநிரை வழிபாடு, நிலபதி வேள்வி, எண் திசை காவலர்கள் இறையானை பெறுதல், புனித மண் எடுத்து பூஜித்தல், முளைப்பாரி அழைப்பு, இளங்கோவில் வழிபாடு, அட்டமங்கலம் எதிர்கொள்ள திருக்குடங்கள் வேள்வி சாலை நுழைவு, வாயிற் காவலர்கள் வழிபாடு, பரிவார மூர்த்திகள் வழிபாடு, வேதிகையில் இறைவனை எழுந்தருள செய்வித்தல், வேதிகை அர்ச்சனை, முழு முதல் பரம்பொருளுக்கு முதல் கால வேள்வி, பெரும் பேரொளி வழிபாடு, உள்ளிட்ட மூன்று நாள் வேள்வி பூஜைகளை, தாமரைக் குளம் கிராமத்தைச் சேர்ந்த குமாரகுருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் செய்கின்றனர், கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை, வாலாஜா நகரம் கிராம நாட்டாமைகள், பக்த பிரமுகர்கள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் செய்து வருகின்றனர்.






# "என் மகனுக்கு நான் கொடுக்கும் அட்வைஸ் இதுதான்" மனம் திறந்த சச்சின் டெண்டுல்கர்

மும்பை , ஜுன்.5–

தனக்கு இளம் வயதில் கிடைத்த சுதந்திரமான சூழலை தனது மகனுக்கும் உருவாக்க முயற்சி செய்துவருவதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.



'சின்ட்டிலேட்டிங் சச்சின்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது:

இளம் வயதில் எனது குடும்பத்தினரிடமிருந்து எனக்கு ஆதரவு கிடைத்தது. அஜித் டெண்டுல்கர் (சகோதரர்) என் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் முக்கிய பங்கு வகித்தார். நிதின் டெண்டுல்கர் (சகோதரர்) எனது பிறந்தநாளில் எனக்காக ஓவியம் வரைந்து கொடுப்பார். எனது தாயார் எல்ஐசியில் பணிபுரிந்து கொண்டிருந்தார், அப்பா பேராசிரியராக இருந்தார். அவர்கள் எனக்கு சுதந்திரத்தை வழங்கினர். அனைத்து பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கும் சுதந்திரமாக செயல்பட விட வேண்டும் என்று என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு கிடைத்த அந்த சுதந்திரமான சூழலை என் மகனுக்காகவும் உருவாக்க முயற்சிக்கிறேன். நம்மை நாம் பாராட்டினால்தான் மக்களும் நம்மை பாராட்டுவார்கள். விளையாட்டில்தான் கவனம் இருக்க வேண்டும் என்று என் அப்பா என்னிடம் சொன்ன அறிவுரையை இப்போது நான் அர்ஜுனிடம் சொல்கிறேன்.

இவ்வாறு சச்சின் பேசினார்.

மேலும் தனது பேச்சின்போது, மனைவி அஞ்சலி பற்றி குறிப்பிட்ட அவர், "ஆஸ்திரேலியா சுற்றுப்பயணத்தின் போது, எனக்கு காயங்கள் ஏற்பட்டதால், இரண்டு கால்களிலும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. ஆனால், அஞ்சலி ஆஸ்திரேலியா வந்து அந்த அறுவை சிகிச்சையை ரத்து செய்துவிட்டார். காயங்கள் காரணமாக நான் மிகவும் விரக்தியடைந்தேன். ஆனால் அஞ்சலி என்னை அன்பாக கவனித்துக்கொண்டார்" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# அருப்புக்கோட்டையில் மாரடைப்பால் ஓட்டுநர் உயிரிழப்பு பேருந்தை நிறுத்தி பயணிகளை காப்பாற்றிய நடத்துனர்

அருப்புக்கோட்டை, ஜுன். 5–

திருச்செந்தூரில் இருந்து திருச்சி நோக்கி அரசுப் பேருந்து ஒன்று புறப்பட்டது, 62 பயணிகள் இருந்த இப்பேருந்தை, மதுரை ஐராவதநல்லூரை சேர்ந்த முருகேஸ்ராஜா ஓட்டினார், இப்பேருந்து அருப்புக்கோட்டை அருகே தூத்துக்குடி- மதுரை நான்குவழிச் சாலையில் பந்தல்குடி அருகே வந்துகொண்டிருந்தது. அப்போது, ஓட்டுநர் முருகேஸ்ராஜாவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. உடனே அவர், பேருந்தின் வேகத்தைக் குறைத்து சாலையோரத்தில் நிறுத்த முயன்றார். ஆனால், அதற்குள் இருக்கையிலேயே மயங்கி சரிந்து விழுந்தார்.

இதனால் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியதால், நடத்துனர் திருப்பதி சாமர்த்தியமாகச் செயல்பட்டு, பிரேக்கை அழுத்தி பேருந்தை நிறுத்தினார். இதனால், பயணிகள் அனைவரும் உயிர்தப்பினர். இதையடுத்து, ஓட்டுநர் முருகேஸ்ராஜாவுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும், ஓட்டுநர் முருகேஸ்ராஜா அசைவின்றி இருந்ததால், 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது. ஆம்புலன்ஸில் வந்த மருத்துவ உதவியாளர்கள் பரிசோதனை செய்து, முருகேஸ்ராஜா உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதனால் பயணிகள் பதற்றமடைந்தனர். பின்னர், அவர்கள் பாதுகாப்பாக மற்ற பேருந்துகளில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர். தொடர்ந்து, அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட ஓட்டுநர் முருகேஸ்ராஜாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதை உறுதிப்படுத்தினர். இச்சம்பவம் குறித்து பந்தல்குடி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆவுடையார்கோவில்அருகே

# பெருமருதூர் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமி வைகாசி விசாக திருவிழாவை முன்னிட்டு மாட்டுவண்டி எல்கை பந்தையம்

ஆவுடையார்கோவில், ஜுன்.5–

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி தாலுகா பெருமருதூர் கிராமத்தில் அமைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி ஆலயத்தில் வைகாசி விசாக திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெறும். 7 வது ஆண்டாக நடைபெற்ற மாட்டுவண்டி எல்கை பந்தயத்தில் புதுக்கோட்டை, தஞ்சை, நாகை,மதுரை, சிவகங்கை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 60 ஜோடி மாடுகள் போட்டியில் பங்கேற்றன. 2 பிரிவுகளாக நடைபெற்ற பந்தயத்தில் நடுமாடு பிரிவில் 17ஜோடி



மாடுகளும், பூஞ்சிட்டுமாடு பிரிவில் 23ஜோடி மாடுகளும் பெரிய மாடுமற்றும் கரிச்சான் மாடுபோன்ற பிரிவுகளில் போட்டியில் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்தன.

பந்தயத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாடுகளுக்கு 1 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலான கோப்பைகள் மற்றும் ரொக்கப்பணம் பரிசாக வழங்கப்பட்டது. மேலும் மாடுகளை சிறப்பாக ஓட்டி வந்த சாரதிகளுக்கு கொடிப்பரிசு மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. சாலையின் இருபுறத்திலும் ரசிகர்கள் திரண்டிருந்து பந்தயத்தை கண்டு ரசித்தனர், 10க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர், விழாவினை பெருமருதூர் இளைஞர்கள், கிராமத்தார்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா தொடக்கம்

அரியலூர், ஜுன்.5–

உடையார் பாளையத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா தொடங்கியது. அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் பேரூராட்சி பகுதியில், திமுக நகரச் செயலாளர் கோபாலகிருஷ்ணன் தலைமையில், கலைஞர் நூற்றாண்டு விழா தொடங்கி வைக்கப்பட்டது. விழாவுக்கு பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார், உடையார்பாளையம் நகரில் பேரறிஞர் அண்ணா சிலை அருகே, திமுக கொடி ஏற்றி வைத்து, அலங்கரிக்கப்பட்ட கலைஞர் கருணாநிதி உருவப்படத்திற்கு, திமுக நிர்வாகிகள் ரஞ்சித் குமார் உள்ளிட்டோரால், மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டதுடன், அங்கு வந்த பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி தங்கராசு, குருவேந்திரன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ஷாஜகான், பொருளாளர் துரைராஜ், ராயர், கிருஷ்ணமூர்த்தி, துணை செயலாளர் ராணி சின்னதுரை, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். அரியலூர் அருகே வாலாஜா நகரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே, அலங்கரிக்கப்பட்ட கலைஞர் கருணாநிதியின் உருவப்படத்துக்கு, திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன், திமுக கொடியேற்றி வைத்து இனிப்பு வழங்கினார்,

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பாண்டியன், திமுக ஒன்றிய பிரதிநிதி சம்பத், துணைச் செயலாளர் அன்பழகன், செல்வம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## தொழிற்சங்கப் பணிகளுக்காக

# பல இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுப் பணியாற்றியவர் எஸ்.பாலசுப்பிரமணியன் : சிஐடியு மாநிலத் தலைவர் சவுந்தர்ராஜன்

புதுக்கோட்டை, ஜுன்.5–

தொழிற்சங்கப் பணிகளுக்காக பல இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுப் பணியாற்றியவர் எஸ். பாலசுப்பிரமணியன் என்றார் சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தர்ராஜன்.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் 36 ஆண்டுகள் பணியாற்றி, அரசுப் போக்குவரத்து ஊழியர் சங்கத்தில் (சிஐடியு) மண்டல பொதுச் செயலாளர், சம்மேளன நிர்வாகி என பல பொறுப்புகளில்திறம்படப் பணியாற்றிவரும், இந்திய தொழிற்சங்க மையம் சிஐடியுவின் புதுக்கோட்டை மாவட்டப் பொருளாளருமான எஸ். பாலசுப்பிரமணியன் பணி ஓய்வு பெற்றார், அவருக்கான பணிநிறைவு பாராட்டு விழா புதுக்கோட்டையில்



நடைபெற்றது, இதில் பங்கேற்று உரையாற்றிய சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தர்ராஜன் பேசினார்.

விழாவிற்கு அரசுப் போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் புதுக்கோட்டை மண்டலத் தலைவர் கே.கார்த்திக்கேயன் தலைமை வகித்தார், மூத்த தோழர்கள் பெரி.குமாரவேல்,எம். ஜியாவுதீன், அ.பிச்சை ஆகியோர் முன்னிலை வகித்தனர், நீதியரசர் எஸ்.முருகானந்தம், போக்குவரத்துக்கழக புதுக்கோட்டை மண்டல மேலாளர் க.குணசேகரன், சம்மேளனப் பொதுச் செயலாளர் கே.ஆறுமுக நயினார், சிஐடியு மாநில செயலாளர்கள் ஏ.ஸ்ரீதர், எஸ்.தேவமணி, மாவட்டத் தலைவர் கே.முகமதலிஜின்னா, தொமுச மாவட்டச் செயலாளர் எம்.கணபதி, தலைவர் ஏ.ரெத்தினம் உள்ளிட்டோர் பேசினர்.

முன்னதாக மண்டலப் பொதுச் செயலாளர் ஆர். மணிமாறன் வரவேற்க, எஸ்.பாலசுப்பிரமணியன் ஏற்புரையாற்றினர். சிஐடியு மாவட்ட துணைத் செயலாளர் சி.மாரிக்கண்ணு நன்றி கூறினார், நிகழ்ச்சியில் அனைத்துத் தொழிற்சங்கத்தினர், அரசியல் கட்சி பிரமுகர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

# கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது எப்படி ? இந்திய ரயில்வே துறை விளக்கம்

புதுடெல்லி , ஜுன்.5–

கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது எப்படி? என்ற விளக்கத்தை இந்திய ரயில்வே துறை அளித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே வாரியத்தின் செயல்பாடு மற்றும் வணிக மேம்பாட்டு உறுப்பினர் ஜெயா வர்மா கூறும்போது, "விபத்து ஏற்பட்ட பஹனகா பகுதியில் 4 ரயில் வழித் தடங்கள் உள்ளன. இதில் இரண்டு பிரதானமான ரயில் வழித்தடங்கள். மற்ற இரண்டும் லூப் தடங்கள்..

ரயிலை நிறுத்த வேண்டும் என்றால், லூப் தடத்தில்தான் நிறுத்துவோம். விபத்தின் போது, இரண்டு விரைவு ரயில்களும் ரயில் நிலையத்தின் வழியாக வெவ்வேறு திசைகளில் சென்று கொண்டிருந்தன. ரயில் நிலையங்களைப் பொறுத்தவரை , லூப் லைன்கள் முக்கிய வழித்தடங்கள் நடுவிலும், முக்கிய வழித்தடங்களின் இருபுறமும் இருக்கும்.



விபத்தின்போது, நிற்க வேண்டிய இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கு வழிவிட இரண்டு ரயில்கள் நிறுத்தப்பட்டன. அப்போது லூப் லைனில் சரக்கு ரயில் காத்திருந்தது. கோரமண்டல் மற்றும் பெங்களூரு - ஹவுரா விரைவு ரயிலுக்கான இரண்டு முக்கிய பாதைகள் அகற்றப்பட்டு, எல்லாம் தயாராக இருந்தது, சிக்னலும் பச்சை அளிக்கப்பட்டது. பச்சை சமிக்ஞை என்பது ஓட்டுநருக்கு முன்னோக்கிச் செல்லும் பாதை தெளிவாக உள்ளது அவர் அதிகபட்ச வேகத்தைப் பயன்படுத்தலாம் என்பதையே குறிக்கும்.

அந்த இடத்தில் கோரமண்டலுக்கான அனுமதிக்கப்பட்ட வேகம் மணிக்கு 130 கி.மீ. அங்கு கோரமண்டல் ரயில் மணிக்கு 128 கிமீ வேகத்தில் சென்றிருக்கிறது. அதே நேரத்தில் பெங்களூரு–ஹவுரா அனுமதிக்கப்பட்ட வேக வரம்பிற்குள் மணிக்கு 126 கிமீ வேகத்தில் சென்றிருக்கிறது. ரயில்கள் அதிவேகத்தில் செல்லவில்லை. சிக்னல் பச்சை நிறத்தில் இருந்ததாலேயே ரயில்கள் சென்றுள்ளன.

முதற்கட்ட அறிக்கையில் சில சிக்னல் கோளாறுகளால் விபத்து ஏற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை நான் அதைப் பற்றி கருத்து தெரிவிக்க மாட்டேன். ஆனால் மூன்று ரயில்கள் மோதியதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை . இதில் கோரமண்டல் ரயில் மட்டுமே விபத்தை எதிர் கொண்டது, கோரமண்டல் ரயில்தான் லூப் லைனில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது. ரயில் அதன் அதிகபட்ச வேகத்தில் இருந்ததால் இதன் தாக்கம் மிகப்பெரியதாக மாறியுள்ளது. சரக்கு ரயில் கனமானது மற்றும் இரும்பு தாது கொண்டது. இதனால் சரக்கு ரயிலுக்கு ஒன்றும் ஆகவில்லை. இந்த மோதலின் முழு பாதிப்பு கோரமண்டல் ரயிலுக்குத்தான் ஏற்பட்டது. கோரமண்டலின் பெட்டிகள் எல்ஹெச்பியால் ( Linke Hofmann Busch coach- ரயில் பெட்டிகளை தயாரிக்கும் ஜெர்மன் நிறுவனம்) ஆனவை. இவை மிகவும் பாதுகாப்பானவை. ஒன்றோடு ஒன்று மோதி விழாது. ஆனால் இந்த விபத்தில் முழு பாதிப்பும் கோரமண்டல் ரயில் பக்கம் வந்ததால், எந்த தொழில்நுட்பத்தினாலும் அதனைக் காப்பாற்ற முடியவில்லை.

கோரமண்டல் ரயிலின் தடம் புரண்ட பெட்டிகள், யஷ்வந்த்பூர் ஹவுரா கடந்து செல்லும் மற்ற முக்கிய பாதையில் விழுந்ததால் யஷ்வந்த்பூர் ரயிலின் கடைசி சில பெட்டிகளும் பாதிப்படைந்தன." என்றார்.

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் இருந்து வெள்ளிக்கிழமை (ஜுன் 2) பிற்பகல் 3.20 மணிக்கு புறப்பட்ட ஷாலிமார் - சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், இரவு 7 மணி அளவில் ஒடிசாவின் பாலசோர் - பத்ரக் ரயில் நிலையங்கள் இடையே பாஹாநாகா பஜார் பகுதியில் வந்து கொண்டிருந்தது. அப்போது, பிரதான தண்டவாளத்தில் இருந்து இணைப்பு தண்டவாளத்துக்கு ரயில் மாறியுள்ளது. இணைப்பு தண்டவாளத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் மீது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் பயங்கர வேகத்தில் மோதியது. இந்த ரயில் விபத்தில் இதுவரை 275 பேர் பலியாகி உள்ளனர். 1000 பேர் காயமடைந்துள்ளனர்.

# தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு..!



சென்னை, ஜூன். 5-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் வெப்ப சலனம் காரணமாக, இன்று (05.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர். திருப்பூர், தேனி, திண்டுக்கல், கரூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, சேலம், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (06.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

06.06.2023 முதல் 08.06.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 20-30 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.

04.06.2023 மற்றும் 05.06.2023: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி முதல் 41 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்; ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2-3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முத்தமிழ் அறிஞர் திமுகவின் மாபெரும் தலைவர் கலைஞர் பிறந்த நாளையொட்டி தமிழக முதல்வர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கலைஞர் நினைவிடத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், கே. என். நேரு, பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் மரியாதை செலுத்தும் நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டார்.

## காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி பகுதியில்

# அன்னை அபிராமி சமுதாய சுகாதார அறிவியல் கல்லூரியின் புதிய கட்டிட திறப்பு விழா



காரைக்கால், ஜூன். 5-

காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி பகுதியில் உள்ள அன்னை அபிராமி சமுதாய சுகாதார அறிவியல் கல்லூரியின் புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. சட்டப்பேரவை தலைவர் ஏம்பலம் செல்வம் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார் சட்டப்பேரவை தலைவருக்கு அன்னை அபிராமி கல்வி குழுமத்தின் சார்பில் செங்கோல் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா, கல்லூரியின் பெயர் பலகையை திறந்து வைத்து வாழ்த்து கூறினார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ எம் எச் நாஜிம், நாக தியாகராஜன், பாஜக மாநில துணைத்தலைவர் அருள்முருகன், புதுச்சேரி அன்னை தெரசா செவிலியர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பிரமிளா தமிழ்வாணன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி வாழ்த்துரை வழங்கினார். மேலும் காரைக்கால் அன்னை தெரசா கல்லூரியின் பொறுப்பு முதல்வர் ஜெயபாரதி மற்றும் இமாகுலேட் கல்லூரியின் துணை முதல்வர் கீதா கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் அன்னை அபிராமி சமுதாய கல்லூரியின் இயக்குனர் டாக்டர் மாரியப்பன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இவ்விழாவில் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கி நலத்திட்டங்கள் நிறைவேற்றபட்டது இவ்விழாவில் கல்லூரியின் பெற்றோர்களும் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இதற்கான ஏற்பாடுகளை அன்னைய அபிராமி கல்வி குழுமத்தின் பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்

# தந்தையின் குடிப்பழக்கத்தால் 16 வயது சிறுமி தற்கொலை

## அனைத்து மதுக்கடைகளையும் மூட அன்புமணி வேண்டுகோள்



சென்னை, ஜூன். 5-

தமிழ்நாட்டில் அனைத்து மதுக்கடைகளையும் மூடுங்கள்; மதுவுக்கு அடிமையானவர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்துங்கள் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனதுட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது: ''வேலூர் மாவட்டம் குடியாத்தத்தை அடுத்த சின்னராஜாகுப்பத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி விஷ்ணுப்பிரியா, கூலித்தொழிலாளியான தமது தந்தையின் குடிப்பழக்கத்தால் தமது குடும்பத்தின் நிம்மதி குலைந்ததை தாங்கிக் கொள்ள முடியாமல் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். தமது தற்கொலைக்கு யாரும் காரணம் இல்லை என்று கடிதம் எழுதி வைத்துள்ள அச்சிறுமி, என் ஆசை என் அப்பா குடிப்பதை நிறுத்த வேண்டும் என்பது தான். எனது குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பதை எப்போது காண்பேனோ, அப்போது தான் எனது ஆன்மா அமைதியடையும்” என்று குறிப்பிட்டிருக்கிறார். விஷ்ணுப்பிரியாவின் கடிதம் எனது இதயத்தை வாட்டுகிறது.

விஷ்ணுப்பிரியாவின் வேண்டுதல் அவருடையது மட்டுமல்ல.... தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான பதின்ம வயது குழந்தைகளின் மனநிலை இது தான். தமிழ்நாட்டிலுள்ள 90 விழுக்காடு குடும்பங்கள் ஏதோ ஒரு வகையில் மதுவால் பாதிக்கப்பட்டுள்ளன. மதுவுக்கு அடிமையானவர்களின் குடும்பங்களில் அமைதி இல்லை. வறுமை... சண்டை..... பசி.... பட்டினி... நோய், மன அழுத்தம், நிம்மதியின்மை ஆகியவை தான் அந்தக்குடும்பங்களை வாட்டுகின்றன. அதன் விளைவு தான் விஷ்ணுப்பிரியா தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த 2018-ஆம் ஆண்டு மே மாதம் நெல்லை மாவட்டம் சங்கரன்கோயில் பகுதியைச்சேர்ந்த தினேஷ் என்ற மாணவர், தந்தையின் குடிப்பழக்கத்தை திருத்த முடியாமல், ''அப்பா.. நான் இறந்த பிறகாவது நீ குடிக்காமல் இரு. நான் இறந்த பிறகு எந்தக் காரியமும் செய்யக் கூடாது. இதன் பிறகாவது குடிக்காமல் இருந்தால்தான் எனது ஆன்மா சாந்தியடையும். நான் இறந்த பிறகாவது நாட்டின் பிரதமர், முதலமைச்சர் ஆகியோர் மதுபானக்கடைகளை அடைக்கிறார்களா என்று பார்ப்போம் இல்லாவிட்டால் ஆவியாக வந்து மதுபானக் கடைகளை ஒழிப்பேன்” என்று கடிதம் எழுதி வைத்து விட்டு நெல்லை வண்ணாரப்பேட்டை பாலத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தினேஷின் தற்கொலையால் எந்த பயனும் ஏற்படவில்லை. விஷ்ணுப்பிரியாவின் தற்கொலையாவது மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன் விஜய் தொலைக்காட்சியில் தமிழில் பேசும் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மாணவி, சமூகநீதி பற்றி பேசியதை சுட்டிக்காட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின், சமூகநீதியைக் காக்க அனைவரும் உறுதியேற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். அதே உணர்வுடன் விஷ்ணுப்பிரியாவின் கடிதத்தையும் புரிந்து கொண்டு, தமிழ்நாட்டில் முழுமையான மதுவிலக்கை ஏற்படுத்துவார் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைவரின் விருப்பமும் மதுவிலக்கு தான். அதை நிறைவேற்ற உதவும் வகையில் தமிழ்நாட்டில் அனைத்து மதுக்கடைகளையும் மூடுங்கள்.. மதுவுக்கு அடிமையானவர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்துங்கள்.. வேலூர் சிறுமிவிஷ்ணுப்பிரியாவின் ஆன்மா அமைதியடைய உதவுங்கள் என்று தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன்.” இவ்வாறு அன்புமணி தெரிவித்துள்ளார்.

# காரின் டயர் வெடித்து விபத்து: நின்று இருந்த லாரி மீது மோதியதில் – 3 குழந்தைகள் உட்பட ஐவர் பலி

காஞ்சிபுரம், ஜூன், 5

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் தாலுகா சே.நாச்சியார் பட்டு பகுதியை சேர்ந்த தம்பதி ராமஜெயம் - இரத்தினா. இவர்களுக்கு ராஜலட்சுமி (5), தேஜாஸ்ரீ (இரண்டரை வயது) மற்றும் 3 மாத ஆண் குழந்தை என 3 குழந்தைகள் உள்ளன. ராமஜெயம், கடந்த வெள்ளிக்கிழமையன்று சென்னையில் உள்ள தன் மாமியார் வீட்டிற்கு குடும்பத்துடன் சென்றுள்ளார்.

பின் அங்கிருந்த உறவினரான ராஜேஷ் (29) என்பவரை அழைத்து கொண்டு, தன் குடும்பத்துடன் நேற்று ஊர் திரும்பியுள்ளார். அப்படி நேற்று முன் தினம் இரவு சொந்த ஊருக்கு சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை வழியாக இவர்கள் வந்து கொண்டிருந்தபோது, அவர்களின் TATA ARIA காரின் டயர் வெடித்து சாலையின் ஓரமாக இரும்புலோடுடன் நிறுத்த வைக்கப்பட்டிருந்த லாரியின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் நிகழ்விடத்திலேயே ராமஜெயத்தின் மனைவி இரத்தினா, குழந்தைகள் ராஜலட்சுமி (5 வயது), இரண்டரை வயது குழந்தை தேஜா ஸ்ரீ, ராஜேஷ் (29) என நான்கு பேரும் உயிரிழந்தனர்.

3 மாத குழந்தையும், ராமஜெயமும் காரில் சிக்கி தவித்து வந்த நிலையில் இருவரையும் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். எனினும் மூன்று மாத குழந்தையும் வழியிலேயே உயிரிழந்துவிட்டது.

ராமஜெயம் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் மாவட்ட கலெக்டர் திடீர் ஆய்வு



காஞ்சிபுரம், ஜூன், 5

காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் உள்ள நுழைவு சீட்டு வழங்கும் மையம், நோயாளிகள் சிகிச்சை பெற்று வரும் பொது பிரிவு மையம் விபத்து பிரிவு, அவசரகால சிகிச்சைபிரிவு, குழந்தைகள் சிகிச்சை பிரிவு, பிரசவ வார்டு மையத்தையும், டயாலிசிஸ் மையத்தையும், கண் சிகிச்சை மையத்தையும் காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் ரத்த சேமிப்பு வங்கியும், நோயாளிகளுக்கு மருந்து வழங்கும் இடத்தையும் பார்வையிட்டு மருந்து கையிருப்பை கேட்டறிந்தார்.

மருத்துவமனையை சுற்றி பார்த்து சுகாதாரமாக வைக்கவும், பொதுப்பணித்துறை மூலம் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்தும், மருத்துவமனைக்கு தேவையான உள்கட்டமைப்பு குறித்தும் டாக்டர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

# மயிலாடுதுறையில் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு மாரத்தான் ஓட்ட போட்டி





மயிலாடுதுறை, ஜூன். 5-

மயிலாடுதுறையில் திமுக மாவட்ட சிறுபான்மையினர் அணி சார்பாக கலைஞரின் நூறாவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாரத்தான் போட்டி நடைபெற்றது. செம்பனார்கோவிலில் தொடங்கிய இந்த மாரத்தான் ஓட்ட போட்டியை பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கொடியசைத்து துவக்கி வைத்தார். 10 கிலோமீட்டர் தூரம் நடந்த மாரத்தான் போட்டியில் ஆண்கள் பெண்கள் என 800-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் சாய் விளையாட்டு அரங்கத்தில் மாரத்தான் ஓட்ட போட்டி நிறைவடைந்தது. அங்கு வெற்றி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கோப்பை மற்றும் ரொக்க தொகை உள்ளிட்டவை வழங்கப்பட்டது. இந்த போட்டிகளில் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்று பரிசுகளை வென்றனர். இதில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி எம் ஸ்ரீதர், சீர்காழி நகர் மன்ற தலைவர் கமல ஜோதி தேவேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

தொடர்ந்து மதுரையை சேர்ந்த கண்ணன் என்ற 68 வயது முதியவர் ஒன்றரை மணி நேரம் கடந்து மாரத்தான் போட்டியின் இறுதிப் பகுதியை வந்தடைந்தார். 2010-இல் தனக்கு மாரடைப்பு ஏற்பட்டதும் தான் சோர்ந்து விடாமல் யோகாசனம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமாக பங்கேற்று இருப்பதால் தான் ஆரோக்கியமாக இருப்பதாகவும், தற்போது வரை எந்த மாத்திரையும் மற்றும் சிகிச்சையும் எடுத்துக் கொள்ளவில்லை எனவும் அப்போது அவர் தெரிவித்தார். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அவரை கௌரவித்த நிலையில் தொடர்ந்து பல்வேறு யோகாசனங்களை செய்து காட்டி அசத்தினார். இளைஞர்கள் பலர் முதியவர் உடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

## சிறுவாபுரி ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# 27-ம் ஆண்டு ஸ்ரீ வள்ளி மணவாளன் திருக்கல்யாண மகோத்சவ நிகழ்ச்சி நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, ஜூன்5-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.

மிகவும் பிரசித்தி பெற்ற இக்கோவிலில் வீற்றிருக்கும் வள்ளி மணவாளனை தரிசித்து அர்ச்சனை செய்து கொண்டு மாலையுடன் கோவிலை வலம் வந்தால் திருமணம், பிள்ளை பேரு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பக்தர்களின் வேண்டுதல் நிறைவேறுவதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இக்கோவிலில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ வள்ளி மணவாளனுக்கு திருக்கல்யாணம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று 27-வது ஆண்டாக திருக்கல்யாண மகோத்சவ விழா நடைபெற்றது. இதை முன்னிட்டு நேற்று காலை ஸ்ரீ வள்ளி மணவாளனுக்கு அபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர், மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, திருக்கல்யாண உற்சவ மகோத்சவம் நடைபெற்றது. நேற்று மதியம் 11.50 மணிக்கு ஆனந்தன் குருக்கள் தலைமையில் 15 பேர் கொண்ட வேத விற்பனர்கள் மந்திரம் முழங்க மாங்கல்ய தாரணம் நடைபெற்றது.

இதன் பின்னர், மங்கள வாத்தியம் மற்றும் திருக்கயிலாய வாத்தியம் முழங்க சுவாமி ஆறுமுறை உள்பிரகார புறப்பாடு நடைபெற்றது. மூலவர் முத்தங்கி சேவையில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமையில் மயிலை சிறுவாபுரி பிரார்த்தனை குழுவினர் மற்றும் பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சி ராணி ராஜா, துணை தலைவர் சேகர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் தொடர்ந்து 100 டிகிரிக்கு மேல் வெயிலின் தாக்கம் பள்ளி விடுமுறையை நீட்டிக்க வேண்டும்– காங்கிரஸ் –அதிமுக, பல்வேறு அமைப்புகள் முதல்வருக்கு கோரிக்கை





புதுச்சேரி, ஜூன், 5

புதுச்சேரியில் வெயில் தாக்கத்தினால் பொது மக்களும், வயதானவர்களும், மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். கடந்த ஒரு வார காலமாக வெயிலின் தாக்கம் 100 பாரன்ஹீட் டிகிரிக்கு மேல் இருந்து வருகிறது மேலும் 35 டிகிரி செல்சியஸ் என வெயில் தாக்கம் நம் மாநிலத்தில் நிலவி வருகிறது. கடந்த மாதத்தை விட வெப்பத்தின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் பகல் நேரங்களில் வீட்டை விட்டு வெளியே செல்வே அஞ்சக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் புதுச்சேரியில் உள்ள அனைத்து கல்வி நிலையங்களுக்கும் வரும் 7ஆம் தேதி அன்று மீண்டும் திறக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் பெரியவர்களே வெளியே செல்ல முடியாத அளவிற்கு வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ள நிலையில் பள்ளி மாணவர்கள் பள்ளிக்கு செல்வதற்கு மிகவும் சிரமத்திற்கு ஆளாகப் படுவார்கள் எனவே வெயிலின் அதிக தாக்கத்தை கருத்தில் கொண்டு 7 தேதி பள்ளி திறப்பை மீண்டும் ஒரு வார காலம் தள்ளி வைக்க வேண்டும் என முதலமைச்சர் மற்றும் கல்வித்துறை அமைச்சரும் மறுபரிசீலனை செய்து விடுமுறையை நீடிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற தலைவர் வைத்தியநாதன் கோரிக்கை வைத்துள்ளார்.

இதேபோல் அதிமுக புதுச்சேரி மாநில பொதுச்செயலாளர் அன்பழகன் முதல்வருக்கு ஜூலை 15 தேதி பள்ளிகளை திறக்க வேண்டும் என்று முதல்வரை நேரில் சந்தித்து கோரிக்கைவைத்துள்ளார். மேலும் இதே கோரிக்கையை புதுச்சேரி காரைக்காலில் உள்ள பல்வேறு அமைப்புகளும் கோரிக்கையாக வைத்துள்ளது



மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர்.ஜெய பாண்டியன் இருதயநல நிபுணர் வீட்டின் காதணி விழாவிற்கு, மதுரை ராஜாஜி மருத்துவமனை டீன் டாக்டர்.இரத்தினவேல், டாக்டர்.ஜெய பாண்டியன், டாக்டர்.சிவப்பிரியா ஜனரஞ்சன், பாண்டியன் மற்றும் மருத்துவ மேதைகள் வந்து சிறப்பித்த போது எடுத்த படம்.

# ஆதனக்கோட்டை ஸ்ரீ வீரடிவிநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதுதல்



ஆதனக்கோட்டை, ஜூன்.5–

ஆதனக்கோட்டை அருகே குப்பையன்பட்டி கிராமத்தில் உள்ள வீரடிவிநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிவனடியார்கள் கலந்துகொண்டு நடராஜரை முதன்மையாக கொண்டு பன்னிரு திருமுறைகளுள் மாணிக்கவாசகச் சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையாரும் எட்டாம் திருமுறையாக தொகுக்கப்பெற்றுள்ள திருவாசகத்தின் பெருமைகளை எடுத்துக்கூறும் திருவாசகம் முற்றோதுதலில் சிவபுராணம் உள்ளிட்ட பல்வேறு திருமுறைகளை சிவமயம் இறைவழி பாட்டுக்குழிவினர் காலை முதல் மாலை வரை பாடி வழிபட்டனர். இந்த நிகழ்ச்சியில் ஆதனக்கோட்டை சுற்றுவட்டாரபகுதி பொதுமக்கள்திரளானோர் கலந்துகொண்டனர்.

# சீனாவில் திடீர் நிலச்சரிவு– 14 பேர் சடலமாக மீட்பு



சீனா,ஜூன்.5–

அரசுக்கு சொந்தமான வனத்துறை அலுவலகம் உள்ள பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. காணாமல் போன 5 பேரை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கோடை மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஜின்கோஹியில் உள்ள மலைப்பகுதியில் நேற்று கடும்நிலச்சரிவுஏற்பட்டது. அரசுக்கு சொந்தமான வனத்துறை அலுவலகம் உள்ள பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டதால் பலர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

உடனடியாக மீட்புக்குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதில் 14 பேர் சடலமாக மீட்கப்பட்டனர். 5 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியானது மாகாண தலைநகர் செங்டுவில் இருந்து 240 கிமீ தொலைவில் உள்ள மலைப்பிரதேசம் ஆகும். தொலைதூர மற்றும் அடர்ந்த காடுகள் நிறைந்த சிச்சுவானின் பெரும்பகுதி, நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடரால் பேரழிவுக்கு உள்ளாகிறது.

# புற்றுநோய் குறித்த வதந்தி நடிகர் சிரஞ்சீவி விளக்கம்



ஹைதராபாத், ஜூன்.5–

தான் புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீண்டதாக வெளியான செய்தி குறித்து நடிகர் சிரஞ்சீவி விளக்கமளித்துள்ளார்.

நடிகர் சிரஞ்சீவி புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீண்டதாக கடந்த சில தினங்களாக ஊடகங்களிலும் சமூக வலைதளங்களிலும் செய்திகள் பரவின. இது குறித்து தற்போது விளக்கமளித்துள்ளார் சிரஞ்சீவி.

தனது ட்விட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள நீண்ட பதிவில் கூறியிருப்பதாவது:

சில தினங்களுக்கு முன்பு, ஒரு புற்றநோய் மையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வின் அவசியம் குறித்து பேசினார். தொடர் பரிசோதனைகளின் மூலம் புற்றுநோயை தடுக்கமுடியும் என்று பேசியிருந்தேன். மேலும் முன்னெச்சரிக்கையாக நான் ஒரு பெருங்குடல் சோதனையையும் மேற்கொண்டது குறித்தும், புற்றுநோய் பாதிப்பில்லாத பாலிப்கள் கண்டறியப்பட்டு அவை அகற்றப்பட்டது குறித்து குறிப்பிட்டேன். நான் பரிசோதனை செய்திருக்காவிட்டால், அது கேன்சராக மாறியிருக்கும் என்று மட்டும்தான் நான் கூறியிருந்தேன்.

ஆனால் சில ஊடக நிறுவனங்கள் நான் பேசியதை சரியாக புரிந்து கொள்ளாமல், எனக்கு கேன்சர் என்றும், சிகிச்சையின் மூலமே நான் உயிர் பிழைத்தாகவும் நான் கூறியதாக எழுதியுள்ளனர். இது தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. என்னுடைய உடல்நலன் குறித்து நலம்விரும்பிகள் பலரும் மெசேஜ் அனுப்பிய வண்ணம் உள்ளனர். இது அவர்கள் அனைவருக்குமான விளக்கம். அதுபோன்ற ஊடகர்களுக்கு என்னுடைய கோரிக்கை என்னவென்றால், விஷயத்தை புரிந்துகொள்ளாமல் முட்டாள்த்தனமான எதையும் எழுதாதீர்கள். இதன் காரணமாக பலபேர் கவலையும், பயமும் கொள்கிறார்கள்.

இவ்வாறு சிரஞ்சீவி தெரிவித்துள்ளார்.



தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரையில் முன்னாள் முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூறாவது பிறந்தநாள் விழாவில் தண்ணீர் பந்தல் திறப்பு, இனிப்புகள் வழங்கி பேரூர் கழகம் சார்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டச் செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான, மா. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுடலைமுத்து, சாமி தேவர், முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் ராமச்சந்திரன், துரை ஆறுமுகம், ஐயப்பன், ஆறுமுகம், முன்னாள் ஒன்றிய பிரதிநிதி அருணா, ராஜா ரபிக், ராஜேஷ், மெர்சி சுந்தர், பலவேசம் மற்றும் கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர்ரகுமான், ஒன்றிய செயலாளர் சுரேஷ், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், சிங்கிலி பட்டி மணிகண்டன், செய்யது மீரான், நல்லையா, காளிமுத்து ஆகியோர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர், மேலும் அனைத்து வழிதடத்திலும் செல்லும் பேருந்து பயணிகளுக்கும் இனிப்புகள்வழங்கப்பட்டது.

# ஆவுடையார்கோவிலில் ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏத்தி அஞ்சலி



ஆவுடையார்கோவில், ஜூன்.5–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் புதிய தமிழகம் கட்சியின் புதுக்கோட்டை கிழக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நேற்று பிற்பகல் 11 மணி அளவில் ஆவுடையார்கோவில் மேல வீதியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் அமலதாஸ் தலைமை தாங்கினார்,மாவட்டத் துணைச் செயலாளர் செல்வராஜ், ஆவுடையார் கோவில் தெற்குஒன்றிய செயலாளர் அன்பழகன்,ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் ராசு , மணமேல்குடி ஒன்றியச் செயலாளர் முத்து, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் ஒடிசாவில் நடந்த கோர ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பில் அஞ்சலி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சி முடிந்து மாலையில்மெழுகுவர்த்தி ஏந்தி ரயில் விபத்தில் மரணமடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர் செந்தில் குமார், சேவகப் பெருமாள், பழனிச்சாமி, பாண்டி, சின்னையா, பழனிமுத்து, பழனிச்சாமி, துரைராஜ், தமிழரசன், ராஜ்குமார், பழனிமுத்து ஆகிய கிளை பொறுப்பாளர்கள் உட்பட நூற்றிற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மதுவிலக்கு அமல் படுத்துகிறோம் என்று சொன்ன திமுக அரசு மதுவிலக்கை அமல்படுத்தாமல் அடுத்த வருடம் பத்தாயிரம் கோடிமதுக்கடை மூலம் அதிக வசூல் செய்ய திட்டமிட்டுள்ளதால் மதுக்கடையைமூட வலியுறுத்தி புதிய தமிழகம் கட்சியின் சார்பாக 100 பொதுக் கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது, அதனை முன்னிட்டு ஜூன் 15ஆம் தேதி புளியங்குடியில் நடைபெறும் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்திற்கு இருநூறு நபர்களை ஆவுடையார்கோவிலில் இருந்து அழைத்து செல்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# ரெயில் விபத்தில் பயணிகள் பலி : ஒடிசா பூரி கடற்கரையில் மணல் சிற்பம் அமைத்து அஞ்சலி




ஒடிசா, ஜூன். 5–

கொல்கத்தா அருகே உள்ள ஷாலிமரில் இருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரெயில், பெங்களூர்-ஹவுரா எக்ஸ்பிரஸ் ரெயில், சரக்கு ரெயில் ஆகியவை ஒடிசாவின் பாலசோர் அருகே மோதி விபத்து ஏற்பட்டது. அதிவேகத்தில் சென்ற போது நடந்த இந்த விபத்தால் ரெயில் பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி உருக்குலைந்தது. நாட்டையே உலுக்கிய இந்த கோர விபத்தில் 290-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ரெயில் விபத்தில் இறந்தவர்களுக்கு இந்திய தலைவர்கள் மட்டுமின்றி, உலக தலைவர்கள் அனைவரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். ரெயில் விபத்தில் இறந்தவர்களுக்கு இந்தியா முழுவதும் பொதுமக்கள், பல்வேறு அமைப்பினர் மெழுகுவர்த்தி ஏந்தியும், மலர்தூவியும் அவர்களது ஆன்மா சாந்தியடைய அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், பிரபல மணல் சிற்ப கலைஞரான சுதர்சன் பட்நாயக் இந்த கோர ரெயில் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பூரி கடற்கரையில் ரெயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கிடப்பது போன்ற மணல் சிற்பத்தை உருவாக்கி உள்ளார். அந்த மணல் சிற்பம் முன்பு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். ரெயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நலம் பெற வேண்டி இந்த மணல் சிற்பத்தை உருவாக்கி உள்ளதாக மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். உயிர் பிழைத்தவர்கள் விரைவில் குணம் அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் என கூறி உள்ளார்.

இதேபோல் மேற்குவங்கம் மற்றும் புதுச்சேரியில் பொதுமக்கள் மெழுகுவர்த்தி ஏந்தி ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ரெயில் விபத்தில் இறந்தவர்களுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். தஞ்சாவூரில் பொதுமக்கள் தங்கள் வீடுகள் முன்பு வரிசையாக நின்று கையில் மெழுகுவர்த்தியை ஏந்தி ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர். திருவண்ணாமலை கோட்டை ஜலகண்டேஸ்வரர் கோவிலில் ரெயில் விபத்தில் இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டி மோட்சதீபம் ஏற்றப்பட்டது. இதேபோன்று, புதுக்கோட்டை, மதுரை, சென்னை, கோவை, நெல்லை உள்பட அனைத்து பகுதிகளிலும் பொதுமக்கள் ரெயில் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# காவல்துறை சார் ஆய்வாளர் பணிக்கான பதவி உயர்வை காவலர்களுக்கு மறுக்கக் கூடாது ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜூன்.5–

காவல்துறை சார் ஆய்வாளர் பணிக்கான பதவி உயர்வை காவலர்களுக்கு மறுக்கக் கூடாது; துறை சார்ந்த சிறிய தண்டனைகளை ரத்து செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து நேற்று ட்விட்டரில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது: ”தமிழ்நாட்டு காவல்துறைக்கு 621 சார் ஆய்வாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஆள்தேர்வு அறிவிக்கையை சீருடைப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது. அப்பணிக்கான இணையவழி விண்ணப்பங்கள் கடந்த ஒன்றாம் தேதி முதல் பெறப்படுகின்றன. மொத்தப் பணியிடங்களில் 20%, அதாவது 123 இடங்கள் தற்போது பணியில் உள்ள காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், பெரும்பான்மையான காவலர்களால் சார் ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பிக்க முடியவில்லை. காரணம்... நிர்வாக முட்டுக்கட்டை.

காவல்துறை பணியில் போது நிகழும் சிறிய தவறுகளுக்காக காவலர்களுக்கு துறை சார்ந்த சிறிய தண்டனைகள் வழங்கப்படும். 2016-ஆம் ஆண்டு வரை இந்தத் தண்டனை பெற்றவர்கள் கூட, துறை சார்ந்த ஒதுக்கீட்டின் கீழ் சார் ஆய்வாளர் பணிக்கு போட்டியிட முடியும். ஆனால், 2016-ஆம் ஆண்டுக்குப் பிறகு 3ஏ, 3 பி பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட்டவர்கள் சார் ஆய்வாளர் பணிக்கு போட்டியிட தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடையை நீக்க வேண்டும் என்றுகாவலர்கள் அளித்தமனு மீது காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் கடந்த இரு ஆண்டுகளாக விசாரணை நடத்தியும் தீர்ப்பளிக்கப்படாதது தான் காவலர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு காரணம் ஆகும்.

2021-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுகவின் தேர்தல் அறிக்கையில், 386-ஆம் வாக்குறுதியாக ’காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துறை சார்ந்த சிறு தண்டனைகள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதுடன், அவர்கள் உரிய காலத்தில் பதவி உயர்வு பெற வழி வகை செய்யப்படும்’ என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் காவலர்கள் பதவி உயர்வு பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக அளிக்கப்பட்ட மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

காவல் சார் ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பிக்க இம்மாதம் 30-ஆம் நாள் கடைசி நாளாகும். காவலர்களுக்கு விதிக்கப்பட்ட துறை சார்ந்த சிறிய தண்டனைகளை தமிழக அரசு நீக்காவிட்டாலோ, அவ்வாறு தண்டனை பெற்றவர்கள் சார் ஆய்வாளர் தேர்வில் பங்கேற்க காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் அனுமதி அளிக்காவிட்டாலோ, பல்லாயிரக்கணக்கான காவலர்களின் சார் ஆய்வாளர் பதவி உயர்வு கனவு கருகி விடும். அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துறை சார்ந்த சிறு தண்டனைகள் அனைத்தும் ரத்து செய்யப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்; காவலர்களின் சார் ஆய்வாளர் பதவி உயர்வு கனவை நனவாக்க வகை செய்ய வேண்டும்.” இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# பாசனதிற்காக நீர் வரத்துக்கால்வாயும், போக்குவரத்திற்கு பாலமும் அமைத்து கொடுத்த திருவாவடுதுறை ஆதீனம் கண்ணப்பர் தம்பிரான் கல்வெட்டு சான்று கண்டுபிடிப்பு





ஆவுடையார்கோவில், ஜூன்.5–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் (திருப்பெருந்துறை) குளத்து குடியிருப்பு கிராமத்தில் பழமையான பாலம் இருப்பது குறித்து முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் பூமி. ஞானசிவம் அளித்த தகவலின் பேரில் புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழகத்தின் நிறுவனர் ஆமணிகண்டன், தலைவர் கரு.ராசேந்திரன் கள ஆய்வு மேற்கொண்டு பாலத்திலிருந்த கல்வெட்டை படியெடுத்தனர்.அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தின் காறுபாறாக இருந்த கண்ணப்பதம்பிரான் என்பாரின்உத்திரவுபடிக்கு பாலம் கட்டப்பட்டது என கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழக நிறுவனர் மங்கனூர் ஆ. மணிகண்டன் கூறியதாவது, திருவாவடுதுறை ஆதீனத்தின்கட்டுப்பாட்டில் இயங்கிவரும் திருப்பெருந்துறை எனும் ஆவுடையார்கோவில் வரலாற்று சிறப்பு மிக்க தலமாகும். ஆதீனத்தின் பதினேழாவது பட்டமாக இருந்த அம்பலவான தேசிகர் காலத்தில் காறுபாறாக இருந்த கண்ணப்ப தம்பிரான் 1889 வருடம் ஆகஸ்டு மாதம் மக்களின் விவசாய பயன்பாட்டிற்காக, வெள்ளாற்றிலிருந்து வாத்தலையை (சிறு கால்வாய்) வெட்டி ஆவுடையார்கோவில் பெரிய கண்மாய்க்கு நீரைக்கொண்டு வந்துள்ளார்.

குளத்துகுடியிருப்பு கிராம மக்கள் திருப்பெருந்துறைசென்று வருவதற்கு பாலத்தையும், பாலத்திலேயே சிறப்பான பலகை அடைப்பு முறையில் நீரின் போக்கை கட்டுப்படுத்துவதற்கு கலிங்கு அமைப்பையும் ஏற்படுத்தியுள்ளார், போக்குவரத்து மற்றும் நீர் மேலாண்மை ஆகிய இரு தேவைகளையும் உணர்ந்து ஒரே கட்டுமானத்தில் இதனை நிறைவேற்றி உதவியுள்ளார். இது முழுக்க கருங்கல், செங்கல், சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்ட ஒரு கட்டுமானமாக உள்ளது.

**கல்வெட்டு :**

மூன்றரை அடி உயரம் , ஒன்றரை அடி அகலத்துடன் உள்ள பலகைக்கல்லில், 14 வரிகளில் “சிவமயம் 1889 வருசம் ஆகஸ்டு மீ . விரோதி வருசம் ஆவணி மீம் இந்த வாத்தலையும் வெட்டி யிந்த கலுங்கு வேலையும் ட்றஸ்ட்டி கண்ணப்ப தம்பிறான் அவர்கள் உத்திரவுபடி கட்டி முடித்தது” என்று பாலத்தின் உட்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கல்வெட்டில் தகவலாக பொறிக்கப்பட்டுள்ளது.

**கண்ணப்ப தம்பிரான் :**

திருவாவடுதுறை ஆதீனத்தின் முதல் பட்டமேற்று நமசிவாய தேசிகர் என்பவர் 15 ஆம் நூற்றாண்டில் ஆதீனத்தை தொடங்கியுள்ளார். கண்ணப்ப தம்பிரான் 16, 17 தேசிகர் காலத்தில் வாழ்ந்துள்ளார் , வேணுவன லிங்க தம்பிரான் பெரிய காறுபாறாக இருந்த போது இவர் காறுபாறாக இருந்துள்ளார். 22.10.1887 ஆம் ஆண்டு வேணுவன லிங்கனார் விருப்பப்படி திருவாவடுதுறை ஆதீன மடத்தில் , சேற்றூர் மற்றும் சிவகிரி ஜெமீன் தார்கள் கொடுத்த தேக்கு மரத்தைக்கொண்டு புதுமையான கட்டுமான முறையில் கொலு மண்டபத்தை அமைத்தார். இதற்கு வேணுவனலிங்கவிலாசம் என பெயரும் இட்டார். ஆவுடையார் கோவில் திருப்பணியிலும் தம்மை முழுமையாகஈடுபடுத்திக் கொண்டவர். இதன் மூலம் இவர் கட்டுமான நுட்பத்தில் தேர்ந்த அறிவு பெற்றிருந்தவர் என அறிய முடிகிறது .

கண்ணப்ப தம்பிரான் காசியில் இருந்தபோது காசி மடத்திற்கு வெவ்வேறு காலகட்டங்களில் இடம் வாங்கியுள்ளார்.

ஆதீனத்தின் சார்பில் தமிழ் தாத்தா உ வே . சாமிநாத ஐயரை ஆதரித்த காரணத்தால் முழு ஈடுபாட்டுடன் சுவடிகளை திரட்டி பல நூல்களை பதிப்பித்தார். இவர் கண்ணப்ப தம்பிரானிடம் தமது தேடல் பணிக்காக உதவிகளை பெற்றவர்.

ஆதீனம் கல்வி , சமூக ஒற்றுமை , பொதுப்பணி , தமிழ் மொழி வளர்ச்சி என பல்வேறு பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளதையும் , ஆன்மீகப்பணியோடு அறப்பணிகளையும் செய்துள்ளதை இப்புதிய கல்வெட்டு சான்று உறுதி செய்கிறது. என்றார் . ஆய்வின் போது தொல்லியல் ஆய்வுக்கழக உறுப்பினர் ந.ரமேஷ் குமார் உடனிருந்தார் .

# வீட்டிற்கு வந்தும் உடல்நிலை சரியில்லாத மனைவியை பார்க்க முடியாமல் மீண்டும் சிறைக்கு திரும்பிய சிசோடியா

டெல்லி, ஜூன். 5–

டெல்லி மாநில மந்திரியாக இருந்தவர் மணிஷ் சிசோடியா. இவரை கடந்த பிப்ரவரி மாதம் 26-ந்தேதி சிபிஐ மதுபான முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டார். அமலாக்கத்துறையும் அவரை கைது செய்துள்ளது. இந்த வழக்கில் அவருக்கு ஜாமீன் கிடைக்காமல் நீதிமன்ற காவலில் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது மனைவிக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் அவரை பார்க்க அனுமதி கேட்டு ஒருநாள் மட்டும் பிணை பெற்றார். காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை நீதிமன்றம் அவருக்கு அனுமதி அளித்தது.

இதனால் நேற்று காலை பலத்த போலீஸ் பாதுகாப்புடன் மணிஷ் சிசோடியா அவரது வீட்டிற்கு சென்று உடல்நிலை சரியில்லாத மனைவியை பார்க்க விரைந்தார். அதற்குள் அவரது மனைவி உடல்நலம் மிகவும் மோசமடைந்ததால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசரப்பிரிவில் சேர்க்கப்பட்டார். இதனால் வீட்டிற்கு வந்தடைந்த மணிஷ் சிசோடியோவால் தனது மனைவியை பார்க்க முடியவில்லை. ஏமாற்றத்துடன் மீண்டும் சிறைக்குத் திரும்பினார். இதற்கிடையே 6 வாரங்கள் இடைக்கால ஜாமீன் கேட்டு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த நிலையில், மருத்துவமனை அவரது மனைவி உடல்நிலை குறித்து அறிக்கை அளிக்கும்படி நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

# கோவையில் சாலையின் தடுப்பு சுவரில் மோதி கல்லூரி மாணவர் பலி

கோவை, ஜூன். 5–

தேனியை சேர்ந்தவர் ஹரிகிருஷ்ணன் (வயது 21). இவர் கோவையில் உள்ள ஒரு கல்லூரியில் 3-ம் ஆண்டு படித்து வந்தார், இதற்காக அவர் மலுமிச்சம்பட்டி அருகே அறை எடுத்து நண்பர்களுடன் தங்கி இருந்துள்ளார். இந்த நிலையில் அவர் தன்னுடன் தங்கி இருக்கும் மாணவர் ஆகாஷ் (18) என்பவருடன் மோட்டார் சைக்கிளில் டீ குடிப்பதற்காக மலுமிச்சம்பட்டிக்கு சென்றார்.

மோட்டார் சைக்கிளை ஹரிகிருஷ்ணன் ஓட்ட, ஆகாஷ் பின்னால் அமர்ந்து இருந்தார். அவர்கள் 2 பேரும் டீ குடித்துவிட்டு வீடு திரும்பினார்கள். மலுமிச்சம்பட்டி அருகே உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகே வந்தபோது திடீரென்று மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி சாலையின் நடுவே உள்ள தடுப்புச்சுவர் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட 2 பேருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. இந்த விபத்தில் ஹரிகிருஷ்ணன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார், காயம் அடைந்த ஆகாசுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது, இது குறித்து மதுக்கரை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# இனி வரும் தேர்தல்களில் பாஜகவை மக்கள் வீழ்த்துவார்கள்

# ஒடிசா ரயில் விபத்து தேடப்பட்டு வந்த தமிழர்கள் 8 பேரில் மூன்று பேர் பத்திரம்







# நோய் கொடுமை கேரளாவில் டாக்டர் தம்பதி தற்கொலை


| சென்னை / புதுக்கோட்டை | 05.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜார்ஜ் ஜோசப் , கேரள இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1887) (இ.1938)



முகம்மது இசுமாயில் , இந்திய முசுலிம் அரசியல் தலைவர் (பி.1896) (இ.1972)



யோகி ஆதித்தியநாத் , இந்திய மதகுரு, அரசியல்வாதி (பி.1972)



## இன்றைய நினைவு நாள்

மாதவ சதாசிவ கோல்வால்கர் , இந்திய இந்துத்துவவாதி, ஆர்.எஸ்.எஸ் இயக்கத் தலைவர் (பி.1906) (இ.1973)



சிவகுமாரன் , சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது ஈழப் போராளி (பி.1650) (இ.1974)



மு. சிவசிதம்பரம் , இலங்கை அரசியல்வாதி (இ.2002)



## உலக சுற்றுச்சூழல் நாள்